சாட்சிகளின் வாக்குமூலம்

பாகம் III சுற்றறிக்கை உத்தரவு 2 (I) உ.வி.மு.ச.

பிரிவு 1 மற்றும் உ.வி.மு.ச.

**அ.வ.எண். 100/2024**

மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், பல்லடம்

வாக்குமூலம் – வா.சா–1

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | ராதிகா | மதம் | : | |
| த/க/பெ. | : | | தொழில் | : | |
| கிராமம் | : | | வயது | : | |
| தாலுகா | : | பல்லடம் | மாவட்டம் | : | திருப்பூர் |

1987ம் வருடத்திய வகைமுறைச்சட்டம் பிரிவு 10ன்படி சாட்சி அழைக்கப்பட்டு அங்கனமே உள்ளார்ந்த உறுதி உரை செய்யப்பட்டு 2026 ஆண்டு பிப்ரவரி மாதம் 19ம் நாள் சாட்சியம்.

---

**முதல் விசாரணை**

நான் இவ்வழக்கில் 2ம் வாதி ஆவேன். என்னுடைய முதல் விசாரணையை நிரூபண வாக்கு மூலமாக தாக்கல் செய்துள்ளேன். அதில் உள்ள சங்கதிகள் எனக்கு தெரியும், படித்துப்பார்த்து தான் கையெழுத்து போட்டேன். அதில் உள்ள கையெழுத்து என்னுடையது தான். கீழ்க்கண்ட ஆவணங்கள்

1. 09.11.2024 தேதியிட்ட முதல் வாதி சந்தியாவின் இறப்பு சான்றிதழ் கணினி பதிவிறக்க நகல்.
2. 06.05.2022 தேதியிட்ட ராக்கிமுத்துவின் இறப்பு சான்றிதழ் கணினி பதிவிறக்க நகல்.
3. 14.04.1999 தேதியிட்ட விசாலாட்சியின் இறப்பு சான்றிதழ் கணினி பதிவிறக்க நகல்.
4. 19.02.2017 தேதியிட்ட அங்கமுத்து இறப்பு சான்றிதழ் அசல்.
5. 12.08.2014 தேதியிட்ட சரஸ்வதி இறப்பு சான்றிதழ் அசல்.
6. அங்கமுத்துவின் வாரிசு சான்றிதழ் அசல்.
7. 20.09.2024 தேதியிட்ட முதல் எதிர்மனுதாரின் கடிதக் குறிப்பு அசல்.
8. ராக்கிமுத்துவின் ஆதார் அட்டை நகல்.
9. ராக்கிமுத்துவின் பான் அட்டை நகல்.
10. ராக்கிமுத்துவின் குடும்ப அட்டை நகல்.

11. ராக்கிமுத்துவின் வீட்டு வரி ரசீது அசல்.

12. ராக்கிமுத்துவின் வீட்டு வரி ரசீது அசல்.

13. முதல் வாதி கணவரின் இறப்பு சான்றிதழ் கணினி பதிவிறக்க நகல்.

ஆகியவற்றை வாதி தரப்பு ஆவணங்களாக குறியீடு செய்ய வேண்டுகிறேன். மேற்படி ஆவணங்கள் முறையே **வா.சா.ஆ.1 முதல் வா.சா.ஆ.13** ஆவணங்கள் ஆக குறியீடு செய்யப்படுகின்றன.

**பிரதிவாதிகள் தரப்பு வழக்கறிஞர் வேண்டுகோளுக்கு இணங்க குறுக்கு விசாரணை ஒத்திவைக்கப்படுகிறது.**

இன்று திறந்த நீதிமன்றத்தில் என் முன்பாக சாட்சி விசாரிக்கப்பட்டு தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சியால் படித்து பார்க்கப்பட்டு சரி என்றும் என் முன்பு கையெழுத்து செய்தும் ஒப்புக் கொள்ளப்பட்டுள்ளது.

V KALIDASAN

Digitally signed by V KALIDASAN
Date: 2026.02.19 18:18:17 +0530

மாவட்ட உரிமையியல் நீதிபதி,

பல்லடம்.